# நாளிதழ் வெளியீடு

## பெரியார் பல்கலைக்கழகம் சார்பில் இளநிலை கலை மற்றும் அறிவியல் படிக்கின்ற மாணவ, மாணவியர்களுக்கு டிசிஎஸ் நிறுவன வேலைவாய்ப்பு முகாம் - துணைவேந்தர் தகவல்:

சேலம், பெரியார் பல்கலைக்கழக வாழ்வியப்பணி வழிகாட்டி மற்றும் பணியமர்த்த மையமும், டாடா கன்சல்டன்சி சர்வீசஸ்-பிபிஎஸ் நிறுவனமும் இணைந்து பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்ற கலை அறிவியல் கல்லூரியில் படிக்கின்ற மாணவ, மாணவியர்களுக்கு வளாகத் தேர்வானது **2016ஜனவரி மாதம் 29ஆம் தேதி முதல் 31 ஆம் தேதி வரை** சேலம், ஆத்தூர், சங்ககிரி, திருச்செங்கோடு, இராசிபுரம், தருமபுரி மற்றும் ஒசூர் ஆகிய பல்வேறு இடங்களில் வேலை வாய்ப்பு முகாமை நடத்தவிருக்கிறது. தேர்விற்கு வரும் போது மாணவ மாணவியர்கள் 4 பாஸ்போட் சைஸ் போட்டோ, தன்விவரப்பட்டியல்(Resume), கல்லூரி அடையாள அட்டை கொண்டு வரவேண்டும்.

**இதற்கான கல்வித்தகுதி :**

1. இளநிலை பட்டபடிப்பில் **பி.காம், பி.பி.ஏ, பி.பி.எம், பி.எம்.எஸ், பி.ஃ.பாம், பி.ஏ** (பொருளியல் தவிர) **பி.எஸ்சி** (புள்ளியியல், கணினி அறிவியல், ஐடி, ஐ.எஸ்.எம் தவிர) இவைகளில் ஏதேனும் ஒன்றினைப் பாடமாக எடுத்திருக்க வேண்டும்.
2. **2015 இல் பட்டபடிப்பில் தேர்ச்சி பெற்ற** (மூன்று மாதத்திற்கு கீழ் வேலை அனுபவம் உள்ள) **மற்றும் 2016 ஆம் ஆண்டு தேர்ச்சி பெறுபவர்கள்** இதில் கலந்து கொள்ளலாம். இதரக் கல்வித் தகுதியான எம்.எஸ்சி, எம்.சி.ஏ, எம்.பி.ஏ, பி.இ, பி.டெக், எம்.காம், எம்.ஏ, இதர தொலைநிலைக் கல்வி ஆகியவை கலந்து கொள்ள தகுதியில்லை.

**மாத சம்பளம்:** 13,000 ரூபாய் ஒரு வருடகாலத்திற்கு உதவித்தொகை மற்றும் பணிபுரியுமிடத்திலிருந்து 50 கிமீ –க்கு அப்பால் இருந்து வந்தால் மாதம் 2,000 ரூபாய் மேலும் இரவு நேரப்பணிக்கு நாளொன்றுக்கு 200 ரூபாய் கிடைக்கும்.

**தேர்வு செய்யும்முறை**: திறனறித்தேர்வு, குழுவிவாதம், தொழில் நுட்பமறிதல், மேலாளர் நேர்காணல் போன்றவை. (பணி நியமன ஆணை பெற்ற ஆறு மாத காலத்தில் பணியில் சேரவில்லை எனில் தகுதியற்றதாக கருதப்படும்)

**பதிவுக்கட்டணம்:** வளாகத்தேர்வில் கலந்து கொள்ளும் மாணாக்கர்கள் ரூபாய் 100/- ஐ வங்கி செலுத்துச் சீட்டு (Challan) மூலம் The Co-ordinator, Career Counselling & Placement Cell, Periyar University, Salem-11 என்ற முகவரிக்கு (A/C No: 8450101002531, IFSC Code: CNRB0008450, கனரா வங்கி, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-11) – செலுத்தி செலுத்துச் சீட்டை ஒப்படைக்க வேண்டும். மேலும் மாணாக்கர் வளாகத் தேர்வில் தேர்ச்சி பெற்று பணி நியமன ஆணை பெற்றால் ரூபாய் 2000/- ஐ பல்கலைக்கழகத்திற்கு செலுத்துச் சீட்டு மூலம் செலுத்த வேண்டும்.

வளாகத்தேர்வானது கீழ்கண்ட தேர்வு மையங்களில் நடைபெறுகிறது.
**பதிவு நேரம்:** காலை 7.30 மணி முதல்

| வ.எண் | தேர்வு மையம் | நாள் | தேர்வு நடைபெறுமிடம் |
|---|---|---|---|
| 1 | திருச்செங்கோடு | 29.01.2016 | விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி |
| 2 | ஒசூர் | | எம்.ஜி.ஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி |
| 3 | இராசிபுரம் | | முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி |
| 4 | சேலம் | 30.01.2016 | ஸ்ரீ சக்தி கைலாஷ் மகளிர் கல்லூரி |
| 5 | ஆத்தூர் | | பாரதியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரி |
| 6 | சங்ககிரி | | விவேகானந்தா கலை அறிவியல் மகளிர் கல்லூரி |
| 7 | சேலம் | 31.01.2016 | ஸ்ரீ சக்தி கைலாஷ் மகளிர் கல்லூரி |
| 8 | தருமபுரி | | ஸ்ரீ விஜய் வித்யாலயா கலை அறிவியல் கல்லூரி |

**மேலும் விவரங்களுக்கு** முனைவர் இரா.வெங்கடாசலபதி, பேராசிரியர் மற்றும் இயக்குநர், வாழ்வியப்பணி வழிகாட்டி மற்றும் பணியமர்த்த மையம், பெரியார் பல்கலைக்கழகம், சேலம். அவர்களை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம். **சேலம் தேர்வு மையம்:** பி.மணிகண்டன் - 9486517743 தொலைபேசி எண் மற்றும் avs.placementcell@rediffmail.com மின் அஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம். **ஆத்தூர் தேர்வு மையம்** : திருமதி. ஜீவா - 9942913539 தொலைபேசி எண் மற்றும் bharathiyar1997@gmail.com. மின் அஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம். **இராசிபுரம் தேர்வு மையம்:** ஹெச். லுக்மன் சித்திக் - 9486584061 தொலைபேசி எண் மற்றும் placement@muthayammal.in மின் அஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம். **திருச்செங்கோடு மற்றும் சங்ககிரி தேர்வு மையம்:** எம்.சரவணன் - 9443734427 தொலைபேசி எண் மற்றும் vicasplacement@gmail.com. மின் அஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம். **தருமபுரி தேர்வு மையம்:** திரு.முனிவேல் - 9698721000 தொலைபேசி எண் மற்றும் munivelmphil@gmail.com மின் அஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம். **ஒசூர் தேர்வு மையம்:** இரா. தாமரைச்செல்வன் - 9786016097 தொலைபேசி எண் மற்றும் mgrplacementcell@gmail.com மின் அஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.
**குறிப்பு:** சென்னையில் கனமழை காரணமாக 2015டிசம்பர் 18 முதல் 20 வரை நடைபெறுவதாக இருந்த இவ்வாளகத் தேர்வு தற்போது 2016 ஜனவரி29 முதல் 31 வரை நடைபெறுகிறது.

**பதிவாளர்**